**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.642/2023**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பண்டாரசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நாராயணன் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | இடைகால் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் இடைகாலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி முருகையா என்னுடைய தம்பி. எதிரி பூராஜா அவருடைய மகன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் 3ம் தேதி, மாதம் ஞாபகமில்லை. காலை சுமார் 08.00 மணியளவில் நானும், எனது மகள்களான கலாசெல்வி, மகாலட்சுமி ஆகியோர்கள் என்னுடைய மனையில் வீடு கட்டுவதற்காக அதில் வானம் தோண்டி தண்ணீர் தேங்கியிருந்ததை மோட்டார் வைத்து எடுத்துக்கொண்டிருந்தோம். அப்போது, அங்கு வந்த ஆஜர் எதிரியான எனது தம்பி "இந்த இடத்தில் வீடு கட்டக்கூடாது" என்று கூறினார். அந்த இடம் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. அப்பா கடன் பட்டதினால் அதை விற்பதற்கு தயாரானார். என்னுடைய தம்பியான முருகையாவிடம் பெரியவர்கள் "அவர் வாங்குகிறார்களா?" என்று கேட்டபோது, அவர் வாங்கிவல்லை என்று சொன்னார். நான் அந்த நிலத்தை விலைக்கு வாங்கினேன்.

எதிரியிடம், நான் ஏன் கட்டக்கூடாது என்று கேட்டேன். அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது, எதிரி பூராஜ் வந்து கலாச்செல்வியை அரிவாள் வைத்து கையில் வெட்டினார். நானும், சின்ன மகள் மகாலட்சுமியும் தடுத்தோம். என்னை கழுத்தை பிடித்து பூராஜ் கீழே தள்ளினார். என்னுடைய தம்பி முருகையா அசிங்கமாக பேசிக்கொண்டு, 3 பேரையும் வெட்டி தள்ளுங்கள் என்று கூறினார். பூராஜ் என்னுடைய இடது கையில் அரிவாளால் வெட்டினார். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. என்னுடைய மகள் மகாலட்சுமியை பூராஜ் அரிவாளால் உடம்பெல்லாம் வெட்டினார். நான் எனது பிள்ளைகளை "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என்று சத்தம் போட்டேன்.

பின்னர், அங்கிருந்தவர்கள் ஆட்டோவில் எங்களை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் எனது 2 மகள்களை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, அங்கு வந்த போலீசார் நடந்த விபரம் குறித்து என்னிடம் கேட்டு வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் அரிவாளை வைத்து தான் எதிரி பூராஜ் என்னையும், எனது மகள்களையும் தாக்கினார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.19 19:20:27 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.642/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலாச்செல்வி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பண்டாரசாமி | தொழில் | : | குடும்பபொறுப்பு |
| கிராமம் | : | அருணகிரிபுரம் | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இடைகாலில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்பு வகித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி முருகையா என்னுடைய அப்பாவின் தம்பி. எதிரி பூராஜா அவருடைய மகன். கடந்த 03.12.2023ம் தேதி, காலை 08.30 மணியளவில் நானும், எனது அப்பா, எனது தங்கை மகாலட்சுமி ஆகியோர்கள் எங்களது சொந்தமான இடத்தில் வீடு கட்டும் வேலையை செய்வதற்காக நின்று கொண்டிருந்தோம். அங்கு தேங்கி இருந்த தண்ணீரை அப்புறப்படுத்தி கொண்டிருந்தோம். அப்போது, எதிரி முருகையா இடத்தை விட்டு வெளியே வாருங்கள் என்று சத்தமாக சொன்னார். அவர் எங்களை பார்த்து "தேவடியா, பல பட்டறை" என்று அசிங்க, அசிங்கமாக திட்டினார். நான் என்னிடம் பேசாதீர்கள் என்று சொன்னேன். முருகையா அவளுடைய தலையை வெட்டு என்று கூறினார். பூராஜா என்னுடைய இடது கையில் அரிவாளால் வெட்டினார். பின்னர், என்னுடைய தலையிலும் அரிவாளால் வெட்டினார்.

அந்த இடத்தை என்னுடைய தாத்தா விற்பதற்கு தயாரான போது, எதிரி முருகையாவிடம் அவர் வாங்குகிறாரா? என்று கேட்டபோது, அவர் வேண்டாம் என்று சொன்னார். பின்னர், நாங்கள் அந்த நிலத்தை பணம் கொடுத்து கிரையம் வாங்கினோம். என்னை வெட்டும் போது என்னுடைய அப்பாவும், தங்கை மகாலட்சுமியும் ஓடி வந்தார்கள். என்னை வெட்டியவுடன் நான் மயக்கமாகி விட்டேன். என்னுடைய அப்பாவையும், தங்கை மகாலட்சுமியையும் வெட்டியதாக நான் மயக்கம் தெளிந்தபோது, மருத்துவமனையில் வைத்து கேள்விபட்டேன். நான் முதலில் தென்காசி அரசு மருத்துவமனையிலும், பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னுடைய அப்பா தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொண்டார். என்னுடைய தங்கை மகாலட்சுமி முதலில் தென்காசி அரசு மருத்துவமனையிலும், பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்துக்கொண்டார். சா.பொ.1 அரிவாளால் என்னை வெட்டினாரா? என்று தற்போது என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

__எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :__

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.19 19:20:32 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No.642/2023</u>
<u>வழக்கு சாட்சி PW-3</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகாலெட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பண்டாரசாமி | தொழில் | : | குடும்பபொறுப்பு |
| கிராமம் | : | ஊர்மேலழகியான் | வயது | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஊர்மேலழகியானில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்பு வகித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி முருகையா என்னுடைய அப்பாவின் தம்பி. எதிரி பூராஜா அவருடைய மகன். கடந்த 03.12.2022ம் தேதி, காலை 08.00, 08.30 மணியளவில் எங்களுக்கு சொந்தமான இடத்தில் வீட்டு வேலைக்காக வானம் தோண்டி தண்ணீர் வெளியே எடுத்து கொண்டிருந்தோம். நானும், என்னுடைய அப்பாவும், அக்கா கலாச்செல்வியும் நின்று கொண்டிருந்தோம். அப்போது, என்னுடைய சித்தப்பா முருகையா அங்கு வந்து என் அப்பாவை வெளியே வா என்று அழைத்தார். என்னுடைய அப்பா வெளியே வந்தவுடன் என் அக்காவும் வந்தார்.

என்னுடைய சித்தப்பா முருகையா எனது அப்பாவையும், எனது அக்காவையும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். என்னுடைய அக்கா "என்னிடம் பேசாதீர்கள், தாத்தாவிடம் போய் பேசுங்கள்" என்று

கூறினார். அப்போது பூராஜா வந்தார். முருகையா "அவளை வெட்டு" என்று கூறினார். உடனே பூராஜா அரிவாள் வைத்து என்னுடைய அக்காவின் கழுத்தை நோக்கி வெட்ட வந்தார். என்னுடைய அக்கா கையை வைத்து தடுத்தார். அந்த வெட்டு என் அக்காவின் இடது கையில் பட்டது.

என்னுடைய அக்காவின் தலையிலும் எதிரி பூராஜா அரிவாள் வைத்து வெட்டினார். என்னுடைய அக்கா மயங்கி விழுந்தார். நானும், அப்பாவும் தடுக்க சென்றோம். எதிரி பூராஜா என்னை தள்ளி விட்டு அரிவாளால் என்னுடைய இரண்டு தொடைகளிலும், இடுப்பு பகுதியிலும், வலது கை விரலிலும், தலையிலும் வெட்டினார். என்னுடைய அப்பாவின் கையில் வெட்டினார். நாங்கள் வலி தாங்க முடியாமல் கத்தினோம். அப்போது, பக்கத்தில் இருந்த நபர்கள் வந்து தடுத்தார்கள். எதிரி பூராஜா "உங்களை எங்கு பார்த்தாலும் வெட்டாமல் விடமாட்டேன்" என்று கூறினார். பக்கத்தில் உள்ளவர்கள் எங்களை ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். நாங்கள் தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்தோம். மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் நானும், என் அக்காவும் சென்றோம். நான் ஒரு மாதமும், என் அக்கா ஒரு மாதத்திற்கு அதிகமான நாட்களும் அங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டோம். என்னுடைய அப்பா தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 அரிவாளால் தான் எதிரி பூராஜா எங்களை தாக்கினார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.19 19:20:42 +0530